தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டப் பேரவை.

திங்கட்கிழமை, 1973 மார்ச் 5.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பெ. சீனிவாசன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் விடையளிக்கவேண்டிய வினாக்கள் பின்னர் எடுத்துக்கொள்ளப்படும்.

Bonus for workers in Plantations

* 238 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the **Minister** for Labour be pleased to state—

(a) whether it is a fact that bonus is to be paid to the workers in plantations in this State; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : (அ) ஆம்.

(இ) 1947-ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் 12(3) பிரிவின் கீழ் சேர்வராயன் மலை நீங்கலாக இம்மாநிலத்தில் உள்ள மலைத் தோட்டங்களின் நிர்வாகத்தினருக்கும், தொழிலாளர்களுக்கும் இடையில் 5—5—1972 அன்று ஏற்பட்ட உடன்படிக்கைக்கு இணங்க, தேயிலைத் தோட்டங்களில் கிடைக்கும் மொத்த வருவாய் 10.5 சதவீதமும் காப்பித் தோட்டங்களில் கிடைக்கும் மொத்த வருவாயில் 9.5 சதவீதமும் 1971-ஆம் ஆண்டுக்கான ஊதியக்கொடையாகக் கொடுக்கப்படவேண்டும். தொழில் தகராறுகள் சட்டத்தின் 18(1) பிரிவின் கீழ் 10—6—1972 அன்று ஏற்பட்ட உடன்படிக்கையின்படி, சேர்வராயன் மலையில் 1971-72-ஆம் ஆண்டுக்கு 5.25 சதவீதமும் 1972-73, 1973-74-ஆம் ஆண்டுகளுக்கு 5 சதவீதமும் ஊதியக்கொடையாக வழங்கப்படும்,

திரு. என். டென்னிஸ் : தோட்டத் தொழிலாளர்கள் அதிகமாக மலைப் பிரதேசத்தில் வேலை செய்கின்ற காரணத்தால், அவர்கள் அதிக சிரமமான வேலையில் ஈடுபட்டிருக்கின்றனர். ஆதலால், அவர்களுக்கு ப்ராஃபிட்-கம்-போனஸ் ஷேர் கொடுக்க வேண்டியதன் அவசியத்தை உணர்ந்து அதற்கான நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : இப்பொழுது அது போன்ற ஒரு திட்டம் இல்லை. ஆனாலும், கனம் உறுப்பினருடைய யோசனை சமயம் வாய்க்கும்போது நினைவில் கொள்ளப்படும்.

திரு. ஜே. ஜேம்ஸ் : மாண்புமிகு அமைச்சரவர்கள் பதில் கூறும்போது, காபி, தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்கின்ற தொழிலாளர்களுக்குப் போனஸ் கொடுப்பதற்கு ஏற்பாடுகள் இருக் கின்றன என்று சொன்னார்கள். அதுபோன்று, அரசாங்க ரப்பர் தோட்டங்களில் வேலை செய்கின்ற தொழிலாளர்களுக்கும் போனஸ் வழங்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : 1965-ஆம் ஆண்டு, ஊதியக் கொடை வழங்கும் சட்டத்தின் 32-ஆவது பிரிவின்படி, இச்சட்டத்தில் கண்டுள்ள, ஒரு மாநில அரசு அல்லது ஒரு உள்ளாட்சி மன்றத்தில் ஏதேனும் ஒரு துறையைச் சார்ந்த அதி கார மன்றத்தினர் அல்லது அதிகார மன்றத்தின்கீழ் நடத்தப் படுகிற தொழிலில் ஈடுபட்டுப் பணிபுரிகின்ற எஸ்டேட்டுகளுக்கு இது பொருந்தாது. இதன்படி அரசு ரப்பர் தோட்டத் தொழிலாளர்களுக்கு ஊதியக் கொடை வழங்கும் வினாவுக்கு இடம் இல்லை. அரசாங்க ரப்பர்த் தோட்டத்தில் பணி புரிகின்றவர் களுக்கு ஊதியக் கொடை வழங்கப்படுவது இல்லை.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : ட்ரான்ஸ்போர்ட் தொழி லாளர்களுக்கு எக்ஸ்-க்ரேஷியா பேமென்ட் கொடுக்கிறார்கள். அது மாதிரியே அரசாங்க ரப்பர் தோட்டத்தில் வேலை செய்கிறவர் களுக்கும் எக்ஸ்-கிரேஷியா பேமென்ட் கொடுக்க ஏற்பாடு செய் வார்களா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : இதைப்பற்றி யோசிக்கவேண்டிய சந்தர்ப்பம் வரும்போது கனம் உறுப்பினர் பொன்னப்ப நாடார் அவர்களின் கருத்து நினைவில் கொள்ளப்படும்